பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் ...

# வலம்புரி
# VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி.
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1455)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 23 திங்கட்கிழமை ( 5-02-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 48

# ★ பேச்சுவார்த்தைக்கு புலிகள் இணங்கி வருவது இனப் பிரச்சினைக்கான சமரசத் தீர்வில்

# நம்பிக்கை ஒளியை ஏற்படுத்துகிறது!

## சுதந்திர தினவிழாவில் ஜனாதிபதி உரை

(கொழும்பு விசேட நிருபர்)

**நீண்டகாலமாக வடக்கு கிழக்கில் தொடர்ந்து வரும் யுத்தத்திற்கு முடிவு கட்டுவதற்க்கான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து ஓரளவுசாதகமான பதில்கிடைத்து வருவதனால்,இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒளிக்கீற்று தென்பட ஆரம்பித்துள்ளது.**

**நோர்வேயின் விசேடதூதுவர்மூலம்,பேச்சுவார்த்தைக்கான சாதகமான பதிலைபுலிகள் தருவதினால்,நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும்.**

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தனது சுதந்திரதின விழா உரையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையில் 53வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றபோது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

இச்சமயம் பாதுகாப்புப் படையினர் 21 மரியாதைக் குண்டுகளை வெடிக்க வைத்தனர். இதனைத்தொடர்ந்து சுதந்திரதினவிழா ஆரம்பமானது.



இச்சுதந்திரதின விழாவில் பிரதமர் ரத்தினசிறி விக்கிரமநாயக்கா, சபாநாயகர், அனுரா பண்டாரநாயக்கா, பாராளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ ராஜதந்திரிகள், உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தீவிர பாதுகாப்புக் கெடுபிடிகள் எதுவுமின்றி இம்முறை சுதந்திர தின விழா நடைபெற்றது. அவ்விழாவில் ஜனாதிபதி மேலும் பேசுகையில் கூறியதாவது;

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கு மாகாணத்தில் மேலும் 3000 ஆசிரியர்கள் இவ்வருடம் நியமனம் ஆவர்!

[திருகோணமலை]

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு இவ்வாண்டு மூவாயிரம் தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப் படவுளளனர்.

இவர்களில் ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களும், ஆயிரம் தொண்டராசிரியர்களும் மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக் கழகம் மற்றும் கல்வியல் கல்லூரிகளுக்கு அனுமதி கிடைக்காத மாணவர்களில் ஆயிரம் பேருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படுமென்று தெரிவிக்கப் படுகிறது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## எரிக்சோல் நேற்று லண்டன் பயணமானார்

[கொழும்பு]

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம்தமது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று அதிகாலை லண்டன் பயணமாகியுள்ளார்.

லண்டன் பயணமாகியுள்ள நோர்வேயின் தூதுவர் இலகையில் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திடம் எடுத்துக் கூறுவார் என தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ந-4

## "சிற்றி ஒவ் றிங்கோ" நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

'சிற்றி ஒவ் றிங்கோ, பயணிகள் கப்பல் நாளை செவ்வாய்க்கிழமை 400 பயணி... வோருக்கான பயணச்சீட்டு, இன்று காலை முதல்யாழ். ஸ்ரான்லி வீதி, மணியம் கட்டடத்தில் இயங்கும் ரான்

## 53வது சுதந்திரதின நிகழ்வுகளில் 4தமிழ் எம்.பிக்களே பங்குபற்றினர்

(கொழும்பு)

இலங்கையில் பல பாகங்களி... கொழும்பில் நடந்த சுதந்திரதின நிகழ்வில் வடக்கு புனர்... ப்பினரும் பிரதி அமைச்சருமான எஸ் கணேசமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

'சிற்றி ஒவ் றிங்கோ, பயணிகள் கப்பல் நாளை செவ்வாய்க்கிழமை 400 பயணிகளுடன் காங்கேசன்துறையிலிருந்து திருமலை நோக்கி புறப்படும்,

இக்கப்பல் பயணம் செய்வோருக்கான பயணச்சீட்டு, இன்று காலை முதல்யாழ். ஸ்ரான்லி வீதி, மணியம் கட்டடத்தில் இயங்கும் ரான் அலுவலகத்தில் வைத்து வழங்சப்படுமென்று, ரான் அலுவலக அதிகாரி எஸ். குகராஜன் தெரிவித்துள்ளார். இ

# அலரிமாளிகையை நோக்கி பாம்புகள் படையெடுப்பு

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்காவின் உத்தியோகபூர்வுவாசஸ்தலமான அலரிமாளிகைக்குள் பலத்த பாதுகாப்புக்களையும் மீறி பாம்புகள் படையெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாம்புகளைப் பிடிக்கவென இலாகா அதிகாரிகள் குழுவொன்று அலரிமாளிகையை முற்றுகையிட்டு பாம்புகளைத் தேடிப் பிடிப்பதாகவும் பிரதமரின் அலுவலகவாசலில் காணப்பட்ட நீர்ப்பாம்புகளை இவர்கள் பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரின் இனவாதப் பேச்சு பாம்புகளைச் சீற்றம் கொள்ள வைத்துவிட்டதோ என்று கருதவேண்டியுள்ளது போலும். (இ)

# 4தமிழ் எம்.பிக்களே பங்குபற்றினர்

(கொழும்பு)

இலங்கையில் பல பாகங்களிலும் நேற்று இடம் பெற்ற 53 வது சுதந்திரதின நிகழ்வுகளில் நான்கு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள்மட்டுமே கலந்து கொண்டனர்.

கொழும்பில் நடந்த சுதந்திரதின நிகழ்வில் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர்.

மட்டக்களப்பில் நடந்த சுதந்திரதின நிகழ்வில் மட்டு மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான எஸ் கணேசமூர்த்தி

அம்பாறையில் நடந்தநிகழ்வில் ஈ பி டி பியின் எம் பி சங்கர் குணசேகரம் ஆகியோரே சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்ட நான்கு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களாவர். -ந-

# குண்டுகள் மீட்பு

(மாவனெலை)

மாவனெல்லைப் பகுதியில் நேற்று நண்பகல் இரண்டு குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட பாதையாத்திரை கண்டியில் இருந்து ஆரம்பமாவதற்கு முன்பாகவே இக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# 6ந் தரத்திலிருந்து கணனிவிஞ்ஞானம் கட்டாய பாடமாகிறது

அடுத்தஆண்டுமுதல்ஆறாந் தரத்திலிருந்து கணணிவிஞ்ஞானம்கட்டாயபாடமாக்கப் பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக கம்பகாமாவட்டத்தில் இவ்வாண்டுமுதல் கணனிவிஞ்ஞானம் கட்டாய பாடமாக்கப்பட்டு பரீட்சார்த்த அடிப்படையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இப்பரீசாத்த முயற்சி வெற்றிபெறும் பட்சத்தில் நடுமுழுவதும் அடுத்தஆண்டு முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். (வ)

# நாட்டில் விரைவில் அமைதிஏற்பட்டு மக்கள் நிம்மதியாக வாழவேண்டும்

## சுதந்திரதின நிகழ்வில் அரசஅதிபர் உரை

(தென்மராட்சி)

நாட்டில் பொருளாதார சுபீட்சத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி தற்போது ஈடுபட்டு வருகின்றார் மத சுதந்திரம், பேச்சுசுதந்திரம் மற்றும் எழுத்துச் சுதந்திரத்தை நாம் ஒவ்வொருவரும் பேணுதல் அவசியமாகும்.

நம்நாட்டில்விரைவில் அமைதி ஏற்பட்டு எமது எதிர்கால சநததி பூரண சுதந்திரத்துடன் வாழ வேண்டும்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# நயினாதீவில் புதிய யாத்திரிகர் மண்டபம்

(சங்கானை)

நயினாதீவு ஸ்ரீநாகபுஷணி அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி ஸ்ரீபுவனேஸ்வரி யாத்திரிகர் மண்டபங்கள் எதிர்வரும் 7ந்திகதிபுதன் கிழமை திறந்துவைக்கப்படும்.

மேற்படி ஆலய அறங்காவலர் சபைத் தலைவர்வேச வி.சபாநாதன் தலைமையில்இடம்பெறும் இந்நிகழ்வில் ஸ்ரீபுவனேஸ்வரி யாத்திரிகர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இரு விளம்பரம்

### தவறிவிட்டது

ஸ்ரீமுருகன் லேலான்றி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சன்மநாதன் காமினி என்பவரது விசேட அடையாள அட்டை 04. 02. 2001 அன்று திருநெல்வேலிச் சந்திக்கிடையில் கண்டெடுத்தவர்கள் ''வலம்புரி''க் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(2493)


## அபிடேகம் பூர்த்தி

சங்கானை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் ஆலய நாதன லக்ஷ்மி மண்டலாபிடேக பூர்த்தி விழா நாளைசெவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகி சங்காபிஷேகமும் நடைபெற்றுஅம்பாள் வீதியுலாவும் இடம்பெறும்.

(உ-ப-I8)

## பல்கலையில் நாளை செயற்றிட்டம் பற்றிய தொழிற்பட்டறை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உ/த) மாணவர்களின் புதிய பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்ட வேலை (ஒப்படை) பற்றி யாழ். மாவட்ட உயர்தர வகுப்பு விஞ்ஞான ஆசிரியர்களுக்கு தொழிற்பட்டறையொன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் முயற்சியில் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் தேசிய விஞ்ஞான மன்றம் கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் திட்டமிடப்பட்டுள்ள தொழிற்பட்டறை நாளை 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் மார்ச் 7 யூன் 6ஆகிய 3 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இப்பட்டறையில் 39 பாடசாலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 64விஞ்ஞான ஆசிரியர்களும் 16 மூலவள ஆளணியினரும் பங்குபற்றுவர்.

பல்கலைக்கழக விஞ்ஞான கல்வியியல்துறைப் பேராசிரியர்கள், யாழ் மாவட்டகல்வி வலயங்களின் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள் ஆகியோர் மூலவள ஆளணியினராக செயற்படுவர்.

(உ.

## மட்டக்களப்பிலும் சுதந்திர தின நிகழ்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில்நேற்று எளிமையான முறையில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இடம் பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் எஸ். கணேசமூர்த்தி தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்துவைத்தார்.

1983ம் ஆண்டு மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வில்கலந்து கொண்ட அப்போதைய அமைச்சர் கே. டபிள்யு. தேவநாயகம் தேசியக் கொடியை ஏற்றியதற்கு பின்னர் நேற்று இடம் பெற்ற சுதந்திரதின நிகழ்வில் மற்றொரு தமிழ் அமைச்சர் தேசியக்கொடி ஏற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளைவடக்குகிழக்கு மாகாண சுதந்திரதின நிகழ்வு திருகோணமலையில் 1988ம் ஆண்டு இடம் பெற்றபோது வடக்குகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் தேசியக்கொடியை ஏற்றியமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

(இ


## இப்பொழுது புதியஇடத்தில் எங்கள் சேவை

எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களான உங்களுக்கு மேலும் சிறப்பாக சேவைகளை வழங்கும் பொருட்டு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் 2001-02-06 தொடக்கம் இல. 12, கே. கே. எஸ் வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தில் முதலாவது தளத்துக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

'ரக்ஷண மந்திரய' 21, வொக்சோல் வீதி,
கொழும்பு. 2

தொலைபேசி: 325311 - 16 327322 - 34
435301 - 04 320906 329748

தொலைநகல்: 447742

(கி-1451)


## அறிவித்தல்

### யாழ். மருத்துவ சங்கத்தின் (J.M.A) விசேட பொதுக் கூட்டம்

எதிர் வரும் வெள்ளிக்கிழமை (09-02-2001) காலை 11-00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ மாணவர் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் கலந்து ஆலோசிக்கப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

டாக்டர் சி. முகுந்தன்
கௌரவ செயலாளர்
யாழ். மருத்துவ சங்கம்.

[2492]

## யாழ் மக்களின்...

(7ஆம் பக்க தொடர்ச்சி)

பதி போன்றோரிடமிருந்து ஆசிரியரை மதித்துப் போற்றும் பழக்கத்தினை அறிந்து கொண்டேன். மேலும் என்னுடைய ஆசிரியர்கள் யாவரும் ஆய்வு விருப்புடையவர்களாகவும் பல உலக மாநாடுகளுக்கு ஆய்வு தொடர்பாக செல்பவர்களாவும் இருந்தனர். பேராசிரியர் ஆ. சதாசிவம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி கைலாசபதி ஆகியோரை இவ்விடயந் தொடர்பாகக் குறிப்பிடலாம். இவர்களுடைய செயற்பாடுகளைப் பார்த்த போது நானும் இவர்களைப் போலப் பல ஆய்வு மாநாடுகளுக்குச் செல்ல வேண்டுமென எண்ணிச் செயற்பட்டேன். அவர்கள் எனக்கு நல்ல வழிகாட்டிகளாக அமைந்தனர். அதன் பயனாக நானும் உலகின் பல நாடுகளுக்குச் செல்லவும், பல உலக மாநாடுகளிலே பங்குபற்றி ஆய்வுக்கட்டுரைகள் படிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது.

அறிமுகத்தாலும் குறுக்குவழிப் போக்காலும் எதையும் அடைந்து விடலாம் எனும் இன்றையகாலத்து எண்ணமில்லாமல் எம்முடைய சொந்த முயற்சியுடைய ஆராய்ச்சி, கற்றல் கற்பித்தல் ஆகிய முயற்சிகள் நடைபெறவேண்டுமென்பதை என்னுடைய ஆசிரியர் எனக்கு உணர்த்தினார்கள். அதனையே இன்றைய தலைமுறையினர்க்கு நான் உணர்த்த விரும்புகிறேன்.

● திருகோணமலையில் பிறந்து, மட்டக்களப்பில் படித்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணிசெய்யத் தொடங்கிய நீங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு வந்தது உங்கள் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனக் கருதுகிறீர்களா?

□ பேராதனைப் பல்கலைக்கழகம் சமூகத்துடன்தொடர்பில்லாத தொன்று. ஒருவகையான அந்நியத்தன்மை அங்கு இருந்தது. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் மக்கள் குடியிருப்புக்கு நடுவிலே அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகத்துக்கு வந்து சேர்ந்ததாலே எனக்கு சமூகத்துடன் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. யாம் பெற்ற அறிவினைப் பொது மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு இங்கு நிறைய ஏற்பட்டுள்ளது.

சமூகத் தொடர்பு சமூக சேவை என்பன மகிழ்ச்சியுடன் நாங்கள் வாழ்வதற்கு உதவுகின்றன. எல்லோருக்கும் சனி ஞாயிறு விடுதலையாயிருக்கும், ஆனால் எங்களுக்கோ அவையும் வேலை நாட்கள் போலவேஇருக்கும். இத்தகைய சமூகத் தொடர்புகள் பெரும்சுமையென நாம் எண்ணுவதில்லை. இவற்றை எனது வாழ்க்கையில் சுவை என எண்ணுகிறேன். இந்தப் பெரும் யாழ்ப்பாணத்திலேயே மண்ணிலே நல்ல வண்ணம் வாழலாம் என்பதை உணர்ந்து கொண்டேன். இதனால் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குத் துணை வேந்தராக வரும்படி என்னைக் கேட்ட பொழுது இந்தப் பல்கலைக் சழகத்தை விட்டு நான் வரவில்லை என விநயமாகக் கூறிவைத்தேன்.

● இன்றைக்கு உயர்பட்ட ஆய்வு பீடாதிபதியாக இருக்கின்ற நீங்கள் ஏன் மரபான ஆடை அணிகின்றீர்கள்?

பல ஆண்டுகளுக்கு முன்னர், நான் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய போது பெருந்தொகையான மாணவிகள் தமிழைச் சிறப்புப்பாடமாகக் கற்கமுன்வந்தார்கள். இவர்கள் யாவரும் மரபான உடை அணிந்து வந்தால் எவ்வளவு பண்பாயிருக்குமென எண்ணினேன். இவர்களை மரபான உடை அணியும்படி கேட்பதற்கு முன்னர் நான் மரபான ஆடை அணியத்தீர்மானித்தேன். என்னுடைய உடைமாற்றத்தைக் கண்ட அப்பிள்ளைகள் யாவரும் மரபான ஆடை அணியத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் பிறபண்பாட்டுத் தாக்கமும் பிறதுறை மாணவர்களின் செல்வாக்கும் தொடர்ந்தும் எங்கள் துறையிலுள்ள பிள்ளைகள் மரபான ஆடை அணியாமைக்குத் தடையாக அமைந்தன போலும்.

● யாழ்ப்பாண மண்ணில் நீங்கள் காலூன்றிய பின்னர் உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவம் ஒன்றைக் கூறுவீர்களா?

□ யாழ்ப் பாணப்பல்கலைக்கழக வளாகத்தினுள் ஏலவே உறைந்திருக்கும் பார்வதி உடன் உறை பரமேஸ்வரனை நாள் தோறும் பணிந்துஎன் பணியைத் தொடங்கும் வாய்ப்பு இருப்பது என்னுடைய அதிஷ்டமேயாகும. வேறு எந்தப் பல்கலைக் கழகத்தில் இப்படியான ஒரு சூழ்நிலை இருக்கின்றது எனக் கூறமுடியாது. யாழ்ப்பாண வளாகம் தொடங்கிய பொழுது. பரமேஸ்வரன் ஆலயத்திலே யாகம் செய்து தான் தொடங்கப் பெற்றது. அன்று தொடக்கம் இன்றும் பரமேஸ்வரனைப் பணிந்து பணிதொடங்கும் அனுபவம் மறக்க முடியாத ஒன்று. மெய்ப் பொருள் காணும் அறிவை பெற அந்த மெய்ப்பொருளையே வணங்கிச் செல்லும் அனுபவம் சொல்லுக்குள் அடங்காததொன்றாகும்.

## அணு சக்தி துறையில் ஒத்துழைப்புக்கிடையாது

### இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் இஸ்ரேலிற்கும் இடையில் அணு சக்தித் துறையில் எந்த வடிவத்திலும் ஒத்துழைப்புக் கிடையாதெனஇந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு எகிப்து சென்றிருக்கும் அவர் அரபுலீக்கின் செயலாளர் நாயகத்தை சந்தித்து பேச்சு நடத்திய போதேமேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

சமாதானத்திற்காக நிலத்தை விட்டுக் கொடுப்பது என்ற அடிப்படையில் மத்திய கிழக்குப் பேச்சுவார்த்தையில் தமது நாடு ஆதரவளிக்கும் என்று தெரிவித்தார்.

இதேவேளையில் இஸ்ரேலிய தேர்தலில் போட்டியிடும் ஏரியல் பெரோன் சிற்கு எதிராகஆர்ப் பாட்டம்ஒன்று இஸ்ரேலில் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[க]

## இலங்கையணி வெற்றி

[புதுடில்லி]

வெலிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றஇரண்டாவது ஒரு நாள் சர்வதேசகிரிக்கெட் போட்டியில் இலங்கையணி 3 விக்கட் வித்தியாசத்தில் நியூசிலாந் அணியை தோற்கடித்துள்ளது. [செ]

## இராசி பலன்

05/02/2001
(தை 23 திங்கள்)
துவாதசி மு.இ 8.29 வரை
திருவாதிரை பி.இ 1.32வரை
ராகுகாலம் :- 7.35 — 9 05
சுபநேரம் :- 12.35 — 2.05
சித்தாமிர்தம்

**மேடம்**
நினைத்த காரியம் கை கூடும் சகோதரர்உதவி, பிரயாணம், தனவரவு.

**இடபம்**
பொருள்விரயம், கௌரவக்குறைவு, முயற்சிதாமதம், நிலை மாற்றம்.

**மிதுனம்**
அழ்ந்த சிந்தனை, ஜனவசியம், பேசனசுகம், முயற்சி ஜெயம்.

**கடகம்**
சுப செலவு, கோபப்படுதல், பிரயாணம், காரிய தாமதம்.

**சிங்கம்**
காரியம் கைகூடும், தனலாபம், மனமகிழ்ச்சி,நண்பர்கள் சந்திப்பு.

**கன்னி**
தொழில் மேன்மை, முயற்சி கைகூடும்,பெரியோர் ஆதரவு, சிறுவியாதி.

**துலாம்**
பிரயாணம், கட்டுப்பாடு பயந்த சுபாவம், ரோகம்.

**விருச்சிகம்**
எதிர்பாராத பிரச்சினை, காரியம் கைகூடும், மனஸ்தாபம், பிரயாணஅபாயம்.

**தனுசு**
போசன சுகம்,பிரயாண சுகம், தனவரவு, காரிய வெற்றி.

**மகரம்**
முயற்சி விருத்தி, சத்துரு ஜெயம்,நோய்குணமடைதல், தனவரவு.

**கும்பம்**
தாழ்வு நிலை, வியாதி, காரியதாமதம், குடும்பக் கவலை.

**மீனம்**
தன்நம்பிக்கைக் குறைவு, மனப்பதட்டம், முயற்சி தாமதம், கல்விச் சிறப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்


## நாகம்ஸ்

சுன்னாகம்

அர்ஜுன் ரம்பா நடித்த

### சுதந்திரம்

10-30, 2-30 (பு. நே)

(கி-713)


## பிரிவுத்துயர் பகிர்வு

துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த இராமலிங்கம் சின்னத்துரை (27-01-2001) அன்று காலமானார் இறுதிக்கிரியைகள் (28-01-2001) அன்றுநடைபெற்றது.

தகவல்:-
சுபேந்திரன் (அண்ணா)
(கிராமசேவையாளர்.)

### சுதந்திரதினத்தையொட்டி

# அரச அலுவலகங்களில்சிங்கக்கொடி

# பல்கலைக் கழகத்தில்கறுப்புக் கொடி

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 53 வது சுதந்திரதினமான நேற்று ஆடம்பரமற்ற வகையில் சிறிய அளவில் யாழ்.நகர அரச அலுவலகங்கள் சிலவற்றில் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

வங்கிகள் உட்பட சில அரச அலுவலகங்களில் இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, சுதந்திர தினத்தினை துக்க தினமாக அனுஷ்டிக்க முடிவு செய்ததற்கிணங்க யாழ். பல்கலைக் கழகத்தில் அரைக்கம்பத்தில் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டிருந்ததுடன் துணைவேந்தரின் அலுவலக கட்டடமேல் மாடியில் சிவப்பு, மஞ்சள் நிறக்கொடி ஒன்று பறக்கவிடப்பட்டிருந்தது.

இவைதவிர, பல்கலைக் கழக பிரதான வாயிலில் கறுப்புக்கொடி குலையுடன் கூடிய வாழைகளும் தோரணங்களும் கட்டப் பட்டிருந்தன.

ஒலிபெருக்கியில் சோக கீதம் இசைக்கப்பட்டும், மாணவர்கள்பலர் கறுப்புப் பட்டி அணிந்தவாறும் காணப்பட்டனர். (உ-104)

## வீதியில் விளக்குகளை பொருத்த கோரிக்கை

(கோப்பாய்)

கோப்பாய் மானிப்பாய் வீதியில் வீதி விளக்குகளைப் பொருத்தி சிரமங்களைத் தவிர்க்க உதவுமாறு சம்பந்தப்பட்ட பகுதி மக்கள்பொது அமைப்புகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக கோப்பாய் ஆஸ்பத்திரி வீதிச் சந்திப் பகுதியில் விரைவில் வீதி விளக்குகளைப் பொருத்துமாறு வைத்திய சாலை அபிவிருத்திச் சபையினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-79)

## பாடுபட்டவன் பார்த்திருக்க பலனை அபகரிக்கும் திருடர்

(சங்கானை)

பாடுபட்டவன் பார்த்திருக்க எங்கிருந்தோ வந்த திருடன் பயிரின் பலனைப் பெற்றுச் சென்ற சம்பவம் அண்மையில் சுழிபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பகுதியில் 3 ஏக்கர் தோட்ட நிலத்தில் பயிரிடப்பட்ட வெங்காயப்பயிர், பலன் பெறும் பருவத்தில் இருந்த வேளை, இரவோடிரவாக அங்கு சென்ற திருடர் கூட்டம் வெங்காயத்தைக் கிண்டி எடுத்துச் சென்றதுடன்,

மீதியாய் இருந்த பயிரினை நாசப்படுத்தியும் உள்ளனர்.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் பாடுபட்டு பயிர் விளைவித்த விவசாயிகள் இவ்வாறான திருடர்களின் கையாலாகாத் தனத்தினால்பெரிதும் பாதிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (உ-ப-18)

## மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் பலி

(மந்திகை)

சட்ட விரோதமாய் மின்பாவனை பெற்று வந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி அந்தவிடத்திலேயே பலியானார்.

உடுப்பிட்டி மில் ஒழுங்கையைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் விஜயகுமார் (வயது 21) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

மின்சாரம் பெறுவதற்காக சட்டவிரோதமான முறையில் இணைக்கப்பட்டிருந்த வயரை, காலை வேளை துண்டிக்க முயன்றபோது அது அறுந்து சம்பந்தப்பட்டவரின் கழுத்துப் பகுதியில் வீழ்ந்ததனாலேயே இம் மரணம் சம்பவித்தமை குறிப்பிடத்தக்கது.

வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெறுபவர் தொகை அதிகரித்துக் காணப்படும் அதே வேளை, அண்மையில் சட்ட விரோதமாய் மின்சாரம்பெற முயன்ற இளம் பெண் ஒருவர் பலியானதும் குறிப்பிடத்தக்கது. (உ-23)

## எய்ட்ஸ் உயிர்கொல்லி கிராமமட்ட பிரச்சார திட்டம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

எய்ட்ஸ் நோய் ஆபத்தில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான கிராம மட்டத்திலானவிரிவான பிரச்சாரத்திட்டம், இன்று இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தொடம்பேயில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

சுகாதார அமைச்சு மற்றும் ஐ. நா. எய்ட்ஸ் ஸ்தாபனம் ஆகியவற்றின் அனுசரணையோடு மொனபல் விஷன் லங்கா நிறுவனம் இத்திட்டத்தினை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## வறுமையை நீக்க உதவவேண்டும்

(இலண்டன்)

ஏழைநாடுகளின் வறுமையை நீக்க செல்வந்த நாடுகள் உதவவேண்டும் என ஐக்கிய நாடுகள்சபை வற்புறுத்தியிருக்கின்றது.

ஏழைநாடுகளுக்கு எதிரான பொருளாதார, வர்த்தகத் தடைகளை நீக்கியும், நிதியுதவிசெய்தும், வறுமையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏழைநாடுகளும் தமது அநாவசிய செலவுகளைத் தவிர்த்து தங்களது நாட்டில் ஊழலை விரட்டவேண்டும் எனவும் ஐ. நா. சபை வலியுறுத்தியிருக்கின்றது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய வறுமையை பாதியாக ஒழிக்க வேண்டும் எனவும் ஐ. நா. சபையில் முடிவெடுக்கப்பட்டது. (செ)

## விளையாட்டு போட்டி

(கோப்பாய்)

நவக்கிரி அ.மி.த.க. பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் எதிர் வரும் சனிக்கிழமை 11 ஆம் திகதி அன்று அதிபர் செ. செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞான சுந்தரம் கலந்து கொள்வார். (உ-79)

## திடீர்ச் சோதனை

[யாழ்ப்பாணம்]

நேற்றைய தினம் யாழ். நகரப் பகுதியில் சில இடங்களில் படையினர் திடீர்ச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டமையை அவதானிக்க முடிந்தது.

எனினும், சோதனை நடவடிக்கைகள் தீவிரமின்றி மேலோட்டமான வகையிலேயேஇடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

## மலசலகூட வசதியில்லை

(சங்கானை)

யாழ்ப்பாணம் மரக்கறிச் சந்தைப் பகுதியில் மலசல கூட வசதி இன்மையால் பொதுமக்கள் பெரிதும் சிரமமுறுகின்றனர். (உ-ப-16)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 03 – ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 156892 எ | 170715 எ |
| 171000 எ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 167604 எ | 167604 பி |
| 167604 சி | 167604 டி |
| 167604 ஈ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 157090 எ | 170821 எ |
| 170824 எ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 153282 எ | 152282 பி |
| 152282 சி | 152282 டி |
| 159531 எ | 159531 பி |
| 159742 எ | 166940 எ |
| 166940 பி | 168286 எ |
| 168292 எ | 168292 பி |
| 168366 எ | 168366 பி |
| 170460 எ | 170460 பி |
| 170465 எ | 170465 பி |
| 170823 எ | 170850 எ |
| 171101 எ | 173277 எ |
| 173297 எ | 173297 பி |
| 173297 சி | 173305 எ |
| 173305 பி | 173331 எ |
| 173331 பி | 175345 எ |
| 173378 எ | 473378 பி |
| 177035 எ | 177035 பி |
| 177222 எ | 177222 பி |
| 177222 சி | 177275 எ |
| 177275 பி | 177276 எ |
| 177281 எ | 177292 எ |
| 177292 பி | 177299 எ |
| 177299 பி | 177354 எ |
| 177354 பி | 177354 சி |
| 177369 எ | 177373 எ |
| 177373 பி | 177373 சி |
| 177374 எ | 177374 பி |
| 177374 சி | 177374 டி |
| 177379 எ | 177379 பி |
| 177415 எ | 177415 பி |
| 177415 சி | 177415 டி |
| 177416 எ | 177417 எ |
| 177417 பி | 177417 சி |
| 177417 டி | 177419 எ |
| 177419 பி | 177428 எ |
| 177428 பி | 177429 எ |
| 177431 எ | 177439 எ |
| 177439 பி | 177476 எ |
| 177476 பி | 177490 எ |
| 177491 எ | 177491 பி |
| 177499 எ | 177499 பி |
| 177500 எ | 177500 பி |
| 177510 எ | 177510 பி |
| 177510 சி | 179541 எ |
| 179541 பி | 179559 எ |
| 179559 பி | 179560 எ |
| 179563 எ | 179564 எ |
| 179565 எ | 179568 எ |
| 179576 எ | 179583 எ |
| 179591 எ | 179591 பி |
| 179591 சி | 17959[illegible] எ |
| 179592 பி | 179609 எ |
| 179618 எ | 179618 பி |
| 180628 எ | 180637 எ |
| 180637 பி | 180638 எ |
| 18 641 எ | 18064 பி |
| 180642 எ | 180642 பி |
| 180643 எ | 180643 பி |
| 180643 சி | 180652 எ |
| 180652 பி | 180695 எ |
| 180695 பி | 180705 எ |
| 180705 பி | 180705 சி |
| 180708 எ | 180712 எ |
| 180712 பி | 180725 எ |
| 180725 பி | 180725 சி |
| 180725 டி | 180769 எ |
| 180832 எ | 180832 பி |
| 180839 எ | 180839 பி |
| 180851 எ | 180851 பி |
| 180877 எ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 144842 எ | 170679 எ |
| 170679 பி | 170679 சி |
| 170687 எ | 170691 எ |
| 170814 எ | 170820 எ |
| 170822 எ | 171293 எ |
| 171303 எ | 171407 எ |
| 171408 எ | 177157 எ |
| 177160 எ | 177160 பி |
| 177162 எ | |
| 177167 எ | 177168 எ |
| 177170 எ | 177179 எ |
| 177179 பி | 177179 சி |
| 177220 எ | 179567 எ |
| 179567 பி | 178567 சி |
| 179578 எ | 179579 எ |
| 179579 பி | 179579 சி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 170811 எ | 170815 எ |
| 171304 எ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 177289 எ | 179573 எ |

### உடுவில்

| | |
|---|---|
| 162797 எ | 162797 பி |
| 162797 சி | 167684 எ |
| 167684 பி | 167684 சி |
| 170813 எ | 174027 எ |
| 174027 பி | 174027 சி |
| 174027 டி | 174027 ஈ |
| 174121 எ | 177099 எ |
| 177099 பி | 17952 எ |
| 179527 எ | 179527 பி |
| 179546 எ | 179547 எ |
| 179547 பி | 179548 எ |
| 179551 எ | 179556 எ |
| 179570 எ | 179570 பி |
| 179572 எ | 179572 பி |
| 179596 எ | 179596 பி |
| 179605 எ | 179614 பி |
| 179621 எ | 179622 எ |
| 179650 எ | 179650 எ |

## காரைநகரில் சுதந்திர தினக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

சுதந்திர நிகழ்வை ஒட்டி காரைநகர் கடற்படையினர் விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

சிரமதானப்பணிகள் இடம் பெற்றதுடன் ஆலயங்களில் விசேட வழிபாடுகளும் இப் பகுதியில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் யாழ். செயலகத்தால்தேசியக்கொடி ஏற்றப்பட்டதுடன் பல்வேறு முக்கிய நிகழ்வுகளும் இடம் பெற்றன. (க)

## விபத்தில் காயம்

(மந்திகை)

நெல்லியடி கொடிகாமம் வீதியில் இராணுவ வாகனத்துடன் ஏற்பட்ட விபத்து சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் பருத்தித்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீசாலை மேற்கில் இருந்து இடம் பெயர்ந்து நெல்லியடி கிழக்கில் வசித்து வந்த நாகலிங்கம் சோமசுந்தரம் ,வயது 58] என்பவரே காயமடைந்தவராவர். [உ-23]

## சிறுவர் கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காரைநகரில் உள்ள ஜே 40 42,44, 47 43 கிராம சேவகர் பிரிவுகளில் இயங்கும் சிறுவர் அபிவிருத்திக் குழுக்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்குகாரைநகர் கலாநிதி ஆ தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில்எதிர்வரும் 7 ம் திகதி 10 மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ-75)

## இன்று வங்கிகள் இயங்கமாட்டா

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று ஞாயிற்றுக் கிழமை பொது விடுமுறை தினமாதலால், மறுதினமான இன்று திங்கட்கிழமை வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# சிறந்த கிராம அலுவலர்கள் வெளிநாட்டில் பயிற்சிபெற வாய்ப்பு

சிறந்த சேவை புரிகின்ற கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு வெளி நாடுகளில் சென்று பயிற்சிபெற வாய்ப்பளிக்கப்படும் என பொது நிர்வாக உள்நாட்டு புனரமைப்பு அமைச்சர் கலாநிதி றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

கிராமசேவை உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளை படிப்படியாக தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவர்களின் நலன்கருதி காரியாலய கொடுப்பனவு கிராமத்தில் 300 ரூபாவும், நகர காரியாலய கொடுப்பனவு 500 ரூபாவும் ஜனவரி முதல் வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும்,

தவறான செயல்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச தண்டனைவழங்க தயங்க மாட்டேன் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார் (உ)

# செய்தித் துளிகள்

## இராஜகோபுரம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் இராஜகோபுர திருப்பணி அமைப்பு அஸ்திவாரக்கிரியைகள் வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளன.

50 அடி உயரமும் ஐந்து தளங்களைக் கொண்டதுமான மேற்படி இராஜ கோபுரம், 30 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ் இராஜகோபுரத்தினை பிரபல சிற்பாசாரியார் அராலியூர் க.கோபாலசிங்கம் அமைக்கவிருப்பதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் சு. பரம்சோதி தெரிவித்துள்ளார். (உ)

## சுகாதாரக் கல்வி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் ஊர்காவற்றுறையில் உள்ள யா/ கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்திலும், யா/ ஊர்காவற்றுறை புனித மரியார் மகளிர் வித்தியாலயத்திலும் சுகாதாரக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்நிகழ்வு மூலம் மாணவர் மத்தியில் டெங்கு காய்ச்சல், மலேரியா காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன், வீடியோப் படக்காட்சி மூலமும் விளக்கங்கள் அளிக்கப்படவுள்ளதாய் ஊர்காவற்றுறை பொதுச் சுகாதார பரிசோதகர் ரா. இந்திரஜித் தெரிவித்துள்ளார். (உ-75)

## விவசாயிகள் பாதிப்பு

(ஈச்சமோட்டை)

பருவகால மழையின் சீரற்ற தன்மையினால் மழையை நம்பி பயிர்ச் செய்கை மேற்கொண்ட வட்டுக்கோட்டைப்பகுதி விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

நாற்று முளைக்கும் நேரத்தில் மழையின்மையும் அறுவடை செய்யும் நேரத்தில் பெரும் மழையும் பொழிந்ததனால் நெற் பயிர்ச் செய்கை பெரிதும் பாதிப்படைந்து எதிர்பார்த்த விளைச்சலை பெறமுடியாது விவசாயிகள் ஏக்கமுற்றுக் காணப்படுகின்றனர். (உ-59)

## தரமற்ற அரிசி விநியோகம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதிகளில் நிவாரணத்திற்காக வழங்கப்படும் அரிசி பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதாக பொது மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் உள்ள சங்கங்களிலும், தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் இயங்கி வரும் ப. நோ. கூ. சங்க கிளைகளிலும் தை மாதத்திற்கான இடம்பெயர்ந்தோர் சமுர்த்தி நிவாரண அரிசி இவ்வாறு தரமற்றுக் காணப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (உ-23)

## சட்டத்தரணி நியமனம்

(மந்திகை)

பருத்தித்துறை நகர சபையின் சட்டத்தரணியாக, சட்டத்தரணி சிவா பாலேந்திராவை இம் மாதத்தில் இருந்து நியமிக்க பருத்தித்துறை நகர சபை தீர்மானித்துள்ளதாக உபதலைவர் என். மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (உ-23)

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2001 ஆம் ஆண்டு விளையாட்டு விழா நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 7 ஆம் திகதி மென்பந்துக் கிரிக்கெட் போட்டி ஊர்காவற்றுறைப் பொதுமைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இது எழுபேர் கொண்ட 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக இடம்பெறவுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் அ. வசந்தன் தெரிவித்தார்.

மேற்படி போட்டியில் இருதயராஜா வி.க, அண்ணா வி.க, அருணோதயா வி.க, சோலையான் வி.க, காந்திஜி வி.க, மகாமாரி வி.க, அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகம் ஆகியன கலந்து கொள்ளவுள்ளன. (உ-75)

## வருடாந்த இல்ல விளையாட்டு

(சங்கானை)

சுழிபுரம் விக்றோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 1. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு வலி.மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார் (செ-ப 18)

## டெங்கு விழிப்பு

(இணுவில்)

வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்குப் பகுதியில் டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள், மிகவும் எழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் தெல்லிப்பழை சுகாதார வைத்தியப் பணிமனையினால் டெங்கு விழிப்புணர்வு சம்பந்தமான, கையடக்கமான, துண்டுப்பிரசுரம் ஒன்றும் வெளிடப்பட்டு உள்ளது.

இதனை அப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விநியோகித்து வருகின்றனர். (உ-49)

## ஆலோசனை கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர்பிரிவில் ஆரம்ப பிள்ளைப் பருவ மேம்பாட்டிற்கான பிரதேச மட்ட ஆலோசனைக்குழுக் கூட்டம் எதிர் வரும் 13ம் திகதி செவ்வாய்க் கிழமை 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார் (உ-23)

## தையல் டிப்ளோமா

(மந்திகை)

கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவினால் நடத்தப்படும் மாதர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ-23)

# தார் பீப்பாக்கள் வருவதில் தாமதம் வீதிதிருத்தும்பணிகள் இடை நடுவில்

(கோப்பாய்)

வீதி திருத்தத்திற்கென யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவேண்டிய 700 தார் பீப்பாக்கள் தொடர்ந்தும் திருகோணமலையில் எடுத்து வரப்படும் மார்க்கமின்றி இருப்பதாக தெரியவந்துள்ளது.

தார் வந்து சேராமையினால் திருத்துவதற்கான முன் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் வீதிகள் பல இருப்பதாக சம்மந்தப்பட்ட வட்டாரங்களில்இருந்து அறிய முடிகிறது.

இவ்வாறு தார் வந்து சேர்வதில் தாமதம் ஏற்படுவதனால் வீதியில் பறிக்கப்பட்ட கல், மண் என்பன நாலாபக்கமும் சிதறுண்டு மக்கள் பாவனைக்கு இன்னும் சிரமம் அளிப்பதாய் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-79)

# கண்ணபுரம் மக்கள் குடிநீர் பெறுவதில் சிரமம்

[ஊர்காவற்றுறை]

வேலணைத்துறையூர் அம்பிகை நகர் கண்ணபுரம் கிராமத்து மக்கள் குடிநீர் பெறுவதில் தொடர்ந்தும் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த 2 வருடங்களுக்கு முன்னதாக ஜி.ரி.சற் நிறுவன உதவியுடன் அப்பகுதி பொதுமக்கள் இணைந்து ... டியில் இருந்து குடிநீர் பெறுவதற்கான குழாய்கள் பொருத்தும் பணிகள் இடம் பெற்று பூர்த்தியடைந்த போதிலும் இற்றைவரை நீர் விநியோகம் சீராக இடம்பெறாமையினால் மக்கள் ஏமாற்றமடைந்து காணப்படுகின்றனர். [உ-75]

# வேலணை பி. சபை நூலகத்திற்கென நூல்கள் கொள்வனவு

[ஊர்காவற்றுறை]

வேலணைப் பிரதேச சபை பொது நூலகத்திற்கு மேலும் ஒரு தொகுதி நூல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாய் மேற்படி பிரதேச சபைத் தலைவர் என். கருணாகர குருமூர்த்தி தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட 50 ஆயிரம் நிதி மூலம் க. பொ. த. (உ/த), க. பொ. த. (சா/த) மாணவர்களுக்கான பரீட்சைக்கு தயார் செய்யும் வகையிலான நூல்களே கொள்வனவு செய்யப்படவுள்ளன. (உ-75)

# மரக்கிளையுள் மறையும் மின்னிணைப்பு வயர்கள் மக்கள் திண்டாட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் சிற்சில இடங்களில் மின்னிணைப்பு வயர்களில் முட்டியவாறு மரக் கொப்புகள் வளர்ந்து காணப்படுவதனால் சீரற்ற மின் விநியோகத்தினை பெறும் நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலை சட்ட விரோத மின் பாவனையாளர்களுக்கு சாதகமாய் அமைந்து இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம், இத்தடைகளை அகற்றும் விடயத்தில் மின்சாரசபைஅதிகாரிகள் அசிரத்தை காட்டி வருவது ஏன் எனவும் சம்பந்தப்பட்ட மக்களால் வினாவெழுப்பப்பட்டுள்ளது. (உ-79)

## சுதந்திரதின நிகழ்வு

(சங்கானை)

சங்கானை பிரதேச செயலகத்தில் சுதந்திரதின நிகழ்வுகள் பிரதேச செயலர் தலைமையில் நேற்று இடம் பெற்றன.

பணியாளர் அனைவரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டமையை அவதானிக்க முடிந்தது. (உ-ப-16)

## நூலக வாரம்

(ஊர்காவற்றுறை)

யா/ ஊர்காவற்றுறைபுனித அந்தோனியார் கல்லூரியில் நூலக வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று முதல் 9ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள நூலக வாரத்தில் நூல்கள் சேகரித்தல், நூலகத்தின் பயனை மாணவர்களுக்குத் தெரியப்படுத்தல், நூல் வாங்க நிதி சேகரித்தல் போன்ற செயற்பாடுகள் இடம் பெறவுள்ளதாக தெரிய வருகின்றது. [உ-75

# பாடசாலைகளில்பணிபுரியும் சிற்றூழியர் அறுவருக்கு விரைவில் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு விரைவில் இடமாற்றம் வழங்குவது தொடர்பான அறிவித்தலை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் பரமேஸ்வரன் விடுத்துள்ளார்.

பாடசாலைகளில் சுகாதாரத் தொழிலாளி, தோட்டத் தொழிலாளி, மற்றும் அலுவலக தொழிலாளிகளாக கடமையாற்றுகின்ற 6 பேருக்கே இவ் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

சி. செபஸ்தியாம்பிள்ளை (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), க. கணேசமூர்த்தி (கந்தளாய் அல்தாரிக் ம வி) அ. செல்வநாயகம் மன்னார் அ. த. க. பாடசாலை) மா. உதயகுமார் (சங்கானை சிவப்பிரகாச ம. வி). செ. முருகவேள் (வேலணை வைத்திலிங்கம் துரைச்சுவாமி ம. வி) ஏ. எல். எம். மகாம் (மன்னார் அல்மினா ம. வி) ஆகியோருக்கே இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன. [ (உ)

# முறைசாராக் கல்விப் பிரிவு போதனாசிரியர் பதவி விண்ணப்பம் கோரல்

(மந்திகை)

வடமராட்சி கல்வி பாடசாலைகளில்முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகளைப் போதிப்பதற்கென ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாய் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை அருகிலுள்ள பாடசாலை அதிபரூடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறுகோரப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் முறைசாராக் கல்விப் பிரிவில் போதனாசிரியர்களாக கடமைபுரிந்தவர்களும் மீள விண்ணப்பிக்க வேண்டும் எனவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-23)

# சுதந்திர தினத்தன்று மட்டுநகரில் புலிக்கொடி ஏற்றப்பட்டது?

[ஏறாவூர்]

இலங்கையின் 53-வது சுதந்திர தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு நகரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட கொடி ஒன்று பறக்கவிடப்பட்டிருந்தது.

புனித மைக்கல் கல்லூரிக்கும், புனித சிசிலியா பாடசாலைக்கும் இடையிலான சந்தியில் மின்கம்பம் ஒன்றில் இக் கொடி கட்டப்பட்டிருந்தது.

தகவல்அறிந்த பொலிஸார் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இக்கொடியை அகற்றினர்.

இதே வேளை. சுதந்திர மாணவர் முன்னணியின் வேண்டுகோளினை அடுத்து மட்டக்களப்பு நகரில் சில இடங்களில் கறுப்புக் கொடிகள்கட்டப்பட்டிருந்தன. [உ-108]

## முத்திரைக்கு தட்டுப்பாடு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதிகளிலுள்ள தபாலகங்களில் முத்திரைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதன் காரணமாக வாடிக்கையாளர்கள் சிரமங்களுக்கு ஆளாவதை காணக்கூடியதாய் உள்ளது. (உ-23)

ன்று ஒரு தகவல்

# இறைவன் அருகில் இருக்கின்றான்

கல்யாணம் ஆகவேண்டிய பெண்ணொருத்தி இருந்தாள். அவளுடைய பெற்றோர்ஒருபையனைப் பார்த்து அவளுக்கு அவனைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கத் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் அந்தப் பெண்ணோ புருஷர்களில் எல்லாம் உயர்ந்தவன் எவனோ அவனைத் தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று பிடிவாதமாக நின்றாள். பெற்றோர்களும் அவளை உன்இஷ்ரப்படியே செய்து கொள் என்று விட்டு விட்டார்கள்.

புருஷர்களுக்குள்ளேயே உயர்ந்தவன் அரசன் தான். எனவே அவனைத் தான் கல்யாணம்செய்வது என்றுஅவள் தீர்மானித்துக் கொண்டாள். அவ்வாறே அவ்வூர் அரசன் எங்கே செல்கிறானோ அவன் பின்னாலேயே அவள் சுற்றித் திரிந்தாள். ஒரு நாள் அரசன் பல்லக்கில் சென்று கொண்டிருந்த போது ஒரு சாமியார் எதிரே வர அரசன் பல்லக்கிலிருந்துஇறங்கி சாமியாரை வணங்கினான்.

உடனேஅப்பெண்அரசனை விட சாமியாரே உயர்ந்தவர் என்று எண்ணி அவரைத் திருமணம் செய்ய எண்ணி அவர் பின்னாலேயேசுற்றினாள் ஒரு நாள் சாமியார் ஆலமரத்தின் கீழிருந்த பிள்ளையார் முன்பாகத் தோப்புக் கரணம் போடவே சாமியாரை விட உயர்ந்தவர் பிள்ளையார் என எண்ணி அவர் அருகே உட்காந்து இருந்தாள்.

அவ்வேளை தெருநாயொன்று அப்பிள்ளையார் மேல் தனது காலைத் தூக்கிக் கொண்டு சிறுநீர் பெய்யவந்ததுஅதைக்கண்டதும்அடடா பிள்ளையாரை விடத் தெருநாய் உயர்ந்தது போலத் தெரிகிறதே என எண்ணி அந்த நாயின் பின்னால் அந்தப் பெண் சென்று கொண்டிருந்தாள். அவ்வேளை அந்த நாயை சிறுவன் ஒருவன் கல்லால் எறிந்தான். நாய் வள், வள் என்று குரைத்துக் கொண்டு ஓடியது. உடனே அவ்வழியால் வந்த ஒருவன் சிறுவனை ஏனடா நாயை அடித்தாய் என்று அதட்டினான்.

நாயைக் காட்டிலும், நாயை அடித்தவன் பெரியவன். அடித்தவனைத் திருப்பி அடித்தவன் அதைவிடப் பெரியவன். இவனேஉயர்ந்தவன். நான் இவனையே கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்ற முடிவைப் பெற்றோருக்குத் தெரிவித்தாள், பெற்றோர் பார்த்த பையன் அவன் தான் என மகளுக்குக்கூறினார்கள்.

எங்கோ தூரத்தில் இருக்கிறான் சுவாமிஎன்று ஊரெல்லாம் சுற்றுகிறோமே அவன் உன் அருகிலேயே இருக்கிறான். இறைவன் தூரத்துக்கெல்லாம் தூரம், சமீபத்துக் கெல்லாம் சமீபமாகவே இருக்கிறான் என்பது சுருதி சொல்லும் உண்மை.

தொகுப்பு
மு. விக்னேஸ்வரன்

## மட்டு.மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகம் உருவாக்கம் தற்காலிக இடைநிறுத்தம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதியபிரதேச செயலகங்கள் உருவாக்கப்படுவது குறித்து தீர்வுகாணப்படும் வரைஇது தொடர்பான ஏற்பாடுகளை இடை நிறுத்தம் செய்வதென மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் அண்மையில் பிரதியமைச்சர் எம். ஜி. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்குரிய வாகரை பிரதேச செயலகத்திற்குரிய பூராணை கிழக்குப் பகுதி துண்டாடப்பட்டு வாழைச்சேனை பிரதேச செயலகத்திற்குரிய ஏழு முஸ்லிம் கிராம சேவையாளர் பிரிவுகள் இணைக்கப்பட்டு சோரம்பற்று என்ற புதிய பிரதேச செயலகப் பிரிவு ஒன்று உருவாக்கப்படுவது குறித்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.செல்வராஜா இந்த கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிம்களின் நலன் பேண புதிய பிரதேச செயலக பிரிவு ஒன்றுஉருவாக்கப்படுமானால் தமிழ் பிரதேசங்களின் நிலங்கள் துண்டாடப்படாதவாறு அது அமைய வேண்டும் என்று இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் பலரால் சுட்டிக் காட்டப்பட்டது.

கல்முனை பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கென தனியான பிரதேச செயலகம் ஒன்று அவர்களின் சொந்த நிலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவதற்கு கூட ஆளுங்கட்சி முஸ்லிம் அரசியல் வாதிகள் அன்று தொடக்கம் இன்றுவரை குரல் கொடுத்து வந்துள்ளதாகவும் உறுப்பினர்கள் பலரால் சுட்டிக்காட்டப்பட்டது. (+-5)

## மக்கள் பார்வைக்கு

(கல்வயல்)

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2001 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட அறிக்கை சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மக்கள் பார்வைக்காக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. (உ-111)

## மகளிர் தினத்தை ஒட்டி கட்டுரைப் போட்டிகள்

(இணுவில்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மூன்று பிரிவுகளாக இடம் பெறவுள்ள இப்போட்டிகளில் பங்கு கொள்ள விருப்பமுடையவர்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தமது விண்ணப்பங்களை கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளரிடம் சேர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகள் இம்மாதம் 21 ஆம் திகதி புதன் கிழமை பி.ப 2.00 மணிக்கு இடம்பெறும். சங்கானைக் கல்விக் கோட்ட மணவர்களுக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மணவர்களுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும். உடுவில் கல்விக்கோட்ட மாணவர்களுக்கு யா/இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழை கல்விக் கோட்ட மாணவர்களுக்கு மல்லாக மகா வித்தியாலயத்திலும் இப் போட்டிகள் இடம்பெறவுள்ளன,

இதே சமயம், ஒவ்வொரு பிரிவிலும் பாடசாலைகளில் இருந்துதலா ஒவ்வொரு மாணவர் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-49)

## பிரதி அமைச்சருக்கு பவள் கவசவாகனம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய நல்லிணக்கத் துறைக்கான இன விவகாரப் பிரதி அமைச்சருமான எஸ். கணேசமூர்த்தியின் பாவனைக்கென ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சினால் பவள் ரக கவசவாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இவரது இந்தக் கவசவாகனத்தில் பொலிஸார் பயணம் செய்வதைக் காணக் கூடியதாக இருப்பதாகவும் இவர் பயணம் செய்யும் காட்சியானது பயணக் கைதியைக் கொண்டு செல்லப்படுவது போல் பரிதாபகரமாக இருப்பதாக மட்டக்களப்பு வாசிகள் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது கடந்த ஒரு வார காலமாக இவர் வசித்து வரும் கல்லடி சுற்றாடலில் பொலிஸ் காவல் போடப்பட்டு உயர் பாதுகாப்புப் பிரதேசமாகக் காட்சியளிப்பதாகவும் இதனால் இவரை சந்திக்கச் செல்பவர்கள் மட்டுமல்ல அப்பிரதேச வாசிகளும் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்குள்ளாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க- 5)

## விவசாய குழு கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி 11 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபர்ஜே.எக்ஸ்செல்வநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ள இக் கூட்டத்தில் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். (உ-75)

## இலங்கையில் தொடரும் யுத்தத்தினால் செலவீனம் அதிகரிப்பு

(வவுனியா)

இலங்கையில் இடம்பெற்று வரும் போரினால் ஏற்பட்ட யுத்தச் செல வீனங்களின் அடிப்படையில் 1952 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ம் ஆண்டு வரை 35ஆயிரத்து 100 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாக்கா நிறுவனம் மேற்கொண்ட மதிப்பீட்டின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போரினால் வடக்கு-கிழக்கு பகுதியின் உட்கட்டுமானம் யாவும் சிதைக்கப்பட்டுள்ளதுடன் 8 லட்சம் பேர் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவதாகவும் இவர்களுள் 20 ஆயிரம்பேர் சிறுவர்கள் என்றும தெரிவிக்கப்படுகிறது. (க-5)

## குடி நீர் வீண்விரயம்

(ஈச்சமோட்டை)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட குடி நீர் விநியோகக் குழாய்களில் அடிக்கடி வெடிப்புகள் ஏற்படுவதனால் அதிகளவு நீர் வீண் விரயமாகிறதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (செ-59)

## அனல்மின் நிலையதிட்டம் இலங்.சாத்தியம் இல்லை

(கொழும்பு)

இலங்கையில் அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு ஜப்பான் வழங்கிய நிதியை மீளப்பெற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புத்தளத்திற்கு அருகே முதுச்சோலை என்னும் இடத்தில் நிலக்கரியைப் பயன்படுத்தி இத்தகைய அனுமின் நிலையத்தை அமைப்பதால் சூழல் மாசடையும் என கண்டனக் குரல்கள் தெரிவிக்கப்பட்டதை அடுத்துஇத் திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க - 05)

★ புதனன்று பாராளுமன்ற குழுக் கூட்டம்

## விலைவாசிஉயர்வு ஆராய ஜனாதிபதி கூட்டுகிறார்!

(கொழும்பு)

டொலரின் பெறுமதி அதிகரிப்பைத் தொடர்ந்துபொருட்களின் விலைவாசி உயர்வைச் சமாளிக்கும் வகையில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அரசாங்க பாராளுமன்ற எம்.பிக்களின் யோசனைகளைக் கேட்டறியும் பொருட்டுஜனாதிபதி அடுத்த புதன்கிழமை பாராளுமன்றக் குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கு அவசர அழைப்புவிடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதிமாளிகையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் விலை வாசி உயர்வுகள் தொடர்பாகவும், இதில் இருந்து மக்களுக்கு எத்தகைய நிவாரணம் வழங்கலாம் என்றும் ஆராய்வதற்கே இக்கூட்டம் கூட்டப்படவுள்ளது.

பொருட்களின் விலை ஏற்றத்தில் எம்.பிக்கள் தமது தொகுதிளுக்த செல்ல முடியாதிருப்பதும இங்கு குறிப்பிடத் தக்கது. (வ)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.00 மணியளவில் மாணவர் பொது அறையில் இடம் பெறவுள்ளது. [உ]

## மடுவில் தொடரும் பொங்கு தமிழ்

(வவுனியா)

மடுப்பகுதியில் தொடர்ந்து ஐந்தாவது நாளாக பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

தட்சணா மருதமடு பாடசாலையில் மாணவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட எழுச்சிப் பேரணி தட்சணா மருதமடு முகாம் கலையரங்கத்தைச் சென்றடைந்தது.

அங்கு மாணவர்களின் கருத்தரங்குகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ந-05)

## திறமையாகசித்தியடைந்த மாணவர்க்கு பாராட்டு

### கட்டைவேலி ப. நோ. கூ. ச. முன்மாதிரி

கடந்த வருடம் இடம் பெற்ற பொதுப் பரீட்சைகளில் திறமையாகச் சித்தியடைந்த கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் மாணவர்களைப்பாராட்டி பரிசில் வழங்க மேற்படி சங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த வருடம் இடம் பெற்ற தரம் 5, க. பொ. த (உ/த),க. பொ. த. (சா/த) பரீட்சைகளில் திறமையாகச் சித்தியடைந்த மாணவர்களே இப் பாராட்டுக்கும் பரிசில் வழங்கலுக்கும் தெரிவாகியுள்ளனர்.

சங்கத்தின் சமூகமேம்பாட்டு கல்விப் பிரிவு மற்றும் கூட்டுறவாளர்கள் நலன் விரும்பிகளின் நிதி ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை,மேற்படி சங்கத்தினால் 1980 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வி மேம்பாட்டு பிரிவின் நிதி மூலம் தற்சமயம் 17 வறிய மாணவர்கள் கல்வி கற்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## யாழ். உயர் நீதிமன்றில் ஒன்பது மனுக்கள் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் நீதிமன்றத்தில் இதுவரை ஒன்பது விசாரணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுத்தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளில், ஏழுமீளாய்வு மனுக்களெனவும், இரண்டு பிணை மீளாய்வு மனுக்களெனவும் தெரியவருகிறது.

பருத்தித்துறை மற்றும் யாழ் நீதிமன்றத்தினால் ஐந்து மீளாய்வு மனுக்களும், ஊர்காவற்றுறை மற்றும் சாவகச்சேரி நீதிமன்றத்தினால் தலா ஒரு மீளாய்வு மனுவும், பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால்தலாஒவ்வொரு பிணை மனுவும் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதேவேளை உயர் நீதிமன்ற நீதிபதி, மற்றும் சட்டமா அதிபரின் பிரதிநிதி ஆகியோர் கொழும்பு சென்றுள்ளனர். (இ-12)

# எட்டு தினங்களின் பின் உயிருடன் மீண்ட சிறுவன்

## குஜராத்தில் சம்பவம்

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் பூகம்பம் நிகழ்ந்து எட்டு தினங்கள் கழிந்த நிலையில் 17வயது சிறுவன் ஒருவன் உயிருடன் மீட்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

அர்ஜுன் பாக் என்ற பெயரையுடைய பிரஸ்தாப சிறுவன் கிணறு ஒன்றிற்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளான்.

கிணறு ஒன்றிலிருந்து கற்களை எடுத்து வெளியே வீசிய பொழுதே இச்சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டதாக அயலவர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# இழுபறி நிலையில் அணைக்கட்டு வேலை

(டாக்கா)

பங்களாதேஷிற்கும்மியான்மாருக்கும் இடையில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த அணையின் கட்டுமாண வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் தொடக்கப்பட்ட அணைக் கட்டு வேலைகள் பலத்த எதிர்ப்பின் மத்தியில் இழு பறி நிலையிலேயே கட்டப்பட்டுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(செ)

# கப்பல் மூழ்கியதில் பலர் பலியாகினர்

(இலண்டன்)

ஜோர்ஜியா நாட்டுசரக்குக் கப்ல் ஒன்று மத்தியத்தரைக் கடலில் பாறை மீது மோதி மூழ்கியதில் ஐம்பது பேர் பலியாகியுள்ளனர்.

இச் சரக்குக் கப்பலில் எண்பத்தி மூன்று பேர் பயணம் செய்தார்கள். உயிர்பிழைத்த முப்பத்தி மூன்று பேரில், பத்துப் பேர் இந்திய நாட்டவர்கள்.

உயிர் தப்பிய பத்து இந்தியர்களும் துருக்கிப் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ)

# வெற்றிகரமாக விண்கலம் இணைவு

[வாஷிங்டன்]

ரஷ்ய சரக்கு விண்வெளிக் கலம் ஒன்று மிர் விண்வெளிக் கலத்துடன் வெற்றிகரமாக இணைந்திருக்கிறது.

ஆட்களற்ற இச் சரக்கு விண்வெளிக் கலத்தை தரைக் கட்டுப்பாட்டு பொறியியல் துறை நிபுணர்கள் பயன்படுத்தி 130 தொன் எடையுள்ள மிர் விண்வெளிக் கலத்தை விண்வெளிப் பாதையிலிருந்து அகற்றி பசுபிக் சமுத்திரத்தில் மூழ்கடிக்கவுள்ளனர்.

1986ம் ஆண்டு தொடக்கம் விண்வெளியில் சுற்றி வருகின்ற மிர் விண்வெளிக்கலம் துருப்பிடிக்கத் தொடங்கி விட்டமையினாலேயே இவ் விண்வெளிக கலத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (செ)

# ஏழு நிமிடங்கள் வரையில் இடம்பெற்ற உரையாடல்

## இரு தலைவர்களும் பங்குபற்றினார்கள்

(புதுடில்லி)

இந்திய பிரதமர்வாஜ்பாய்க்கும், பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஸாரப்புக்கும் இடையில் சுமார் 7 நிமிடங்கள் வரையில் தொலைபேசி உரையாடல் இடம் பெற்றதாக புதுடில்லி செய்திகள் தெரிவித்துள்ளன.

குஜராத்தில் அண்மையில் ஏற்பட்ட பூமிஅதிர்வு, மற்றும் அதனால் ஏற்பட்ட உயிர், உடமைச் சேதங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பரஸ்பரம் பேச்சு நடத்தியுள்ளதாக புதுடில்லிச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

இவ் உரையாடலானது இந்திய பாகிஸ்தான் பிரச்சினையில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தலாமெனவும் இவ்வாறான உரையாடல் மேலும் தொடரும் வாய்ப்புகள் உள்ளதாக பாகிஸ்தான் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-09)

# புதிய தற்காப்புத் திட்டம்

# ஐரோப்பிய நாடுகள் சீற்றம்

(வாஷிங்டன்)

அமெரிக்கா ஏகவுணையின் தாக்குதலில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள புதிய தற்காப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கி வருகின்றது.

இத்திட்டத்தினால் வேறு ஒரு நாடும் அஞ்சத் தேவையில்லை என்றும், பன்நாட்டுப் பாதுகாப்பிற்கு பங்கம் வந்துவிடாது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜேர்மனியில் நடைபெற்ற ஐரோப்பிய பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் இந்த புதிய பாதுகாப்புத் திட்டத்தை ரஷ்யாவும், சீனாவும் உட்பட சில ஐரோப்பிய நாடுகளும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றன.

உலகில் நிலவிவரும் அதிகாரச் சமநிலையை இத்திட்டம் சீர்குலைத்து விடும் எனவும், புதியதொரு ஆயுதப் போட்டிகளைத் தூண்டி விடும் எனவும் சீனாவும் ரஷ்யாவும் விமர்சிக்கின்றன.

அமெரிக்கா கொண்டு வந்திருக்கும் இப் புதிய திட்டத்தினால் சீனா தயாரித்து வைத்திருக்கும் ஏவுகணைகள் வீணாகப் போய்விடும் என்பதனால் சீனாவும் இத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. (செ)

## செய்திப் பரல்

★ கடந்த வாரம் முழுவதும் இந்திய நாளேடுகள் குஜராத் பூமியதிர்ச்சி பற்றியே செய்திகள் வெளியிட்டன.

★ பலமாடிக் கட்டடங்களைக்கொண்டகுஜ்நகரம் சூனியமாகக் காட்சியளிக்கின்றது.

★ கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் மிகப்பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியது குஜராத் நில நடுக்கமே.

★ நேற்றுக்காலை குஜராத்தில் மீண்டும் சிறியளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது

★ கேரள வனப் பகுதியில் சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

★ உலகப் பொருளாதார மாநாட்டை எதிர்த்து சுவிஸ்சர்லாந்தில் கடும் ஆர்ப்பாட்டம்.

★ ஏழை நாடுகளின் வறுமையை நீக்க செல்வந்த நாடுகள் உதவ வேண்டும் என ஐ.நா. சபை வலியுறுத்தியிருக்கின்றது (செ)

# பயணம் ரத்து

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் மலேசிய ஜப்பான் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன

பிரதமர் வாஜ்பாய் அடுத்த வாரம் மலேசியாவிற்கும் ஜப்பானிற்கும் மேற்கொள்ளவிருந்த பயணத்தினை குஜராத் பூமியதிர்ச்சி காரணமாகவே இரத்துச் செய்துள்ளார், (செ)

## உலக தரிசனம்

# சொற்பொழிவுக்கு ஒரு லட்சம் டொலர்

(வாஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டனின் முதலாவது சொற்பொழிவுக்கு ஒரு லட்சம் டொலர் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளின்டன் தனது முதலாவது சொற்பொழிவை இன்று புளோரிடா தரகர்கள், வங்கியாளர்கள் மத்தியில் நிகழ்த்தவிருக்கிறார்.

புதிய ஜனாதிபதி புஷ்ஷிடம் வெள்ளைமாளிகையை ஒப்படைத்த பிறகு, கிளின்டன் நியூயோர்க்கின் புறநகர்ப்பகுதியில் வசித்து வருகிறார்.

இவரின் அடுத்த சொற்பொழிவு எதிர்வரும் 10 ஆம் திகதி மியாமியில் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

# வேதனையிலுள்ளவரிடம் கோடி ரூபா கொள்ளை

(புதுடில்லி)

மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத் மக்களிடம் கத்தி முனையில் ஒரு கோடி ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

விரக்தியின் விளிம்பில் நிற்கும் இம் மக்களை ஆயுத பாணியில் மிரட்டி அங்கு மிஞ்சியிருந்த சேதம் அடைந்த வீடுகளிலும், நகைக்கடைகளிலும் புகுந்து நகைகளையும் பணத்தையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

(செ)

## காலவரையறையற்ற ஊரடங்கு அமுல்

ஸ்ரீநகரின் பல பகுதிகளிலும் நேற்றுக்காலை முதல் கால வரையறையற்ற ஊரடங்கு அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீக்கியர்கள் 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்தே மேற்படி காலவரையறை அற்ற ஊரடங்கு அமுல் படுத்தப்படுவதாக மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

# உயிருக்குப் போராடும் சுரங்கத் தொழிலாளர்

[புதுடில்லி]

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றினுள் அகப்பட்டுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சுரங்கத்தினுள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் அருகிலிருந்த சுரங்கத்தினுள் நிறைந்து நின்ற வெள்ளம் உடைப்பு வழியாக இச் சுரங்கத்தினுள் புகுந்ததில் 35 பேர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

சுரங்கத்தினுள் அகப்பட்டுள்ள சுரங்கத் தொழிலாளர்களின் உறவினர்கள், விபத்துக்கு காரணமான அதிகாரிகள் தண்டிக்கப்படவேண்டும் என கோஷமிட்டவாறுள்ளனர். (செ)

# தீவிரவாதிகள் தாக்கு இராணுவத்தினர் பலி

[லுவாண்டா]

அங்கோலாவில் படையினரின் விமானம் ஒன்று தாக்குதலுக்கு உள்ளாகியதில் 22 பேர் பலியாகியுள்ளனர்.

விமான நிலையத்திலிருந்து புறப்பட் சிறிது நேரத்தில் தீவிர வாதிகளின் தாக்குதலுக்குள்ளாகியது.

இதில் பலியாகியோர் உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட இராணுவத்தினரே எனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-து)

# தமிழகமீனவர்களின்கொலையை கண்டித்து இலங்கையுடனான ராஜிக உறவை இந்தியா துண்டிக்க வேண்டும்

## பாராளுமன்றில்உறுப்பினர்கள்ஆவேச உரை

இலங்கையுடனான தேசிய உறவுகளை துண்டிக்கவேண்டும் என்று இந்திய பாராளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் வலியுறுத்தி உரையாற்றினர்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் அடிக்கடி சுட்டுக் கொல்லப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும்வகையிலேயேபாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவேசத்துடன் உரையாற்றினர்.

தமிழகமீனவர்களை இலங்கை கடற்படையினர் கண் மூடித்தனமாகசுட்டுக் கொல்வதற்கு இந்திய சட்டப் பேரவையில் பல்வேறுகட்சி உறுப்பினர்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்த துடன் இலங்கையுடனானஇராஜதந்திர உறவை துண்டிக்க வேண்டும் என்று வற்புறுத்திக்கூறினர்.

இது குறித்து அண்மையில் சட்டப் பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றை தேசிய லீக் உறுப்பினர் நிஜமூர்த்தி கொண்டு வந்தார்.

கடலில் மீன்பிடிக்கச்செல்லும் தமிழக மீனவர்களை கண் மூடித்தனமாக சுட்டுக் கொல்லும் இலங்கையுடனான உறவுகளை இந்தியா துண்டித்துக் கொள்வதுடன் இலங்கைக்குஎதிராக பொருளாதார தடையையும் விதிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேனாட் பேசுகையில் கச்சதீவை இலங்கையிடம் ஒப்படைத்தால் தான் தமிழக மீனவர்களுக்கு இந்தக்கதி ஏற்படுகிறது என்றும் அத்தீவை இருநாட்டிற்கும் பொதுவானதாக்க வேண்டும் என்றும் கூறினார்.

இலங்கையிலிருந்துபொருட்கள் இறக்குமதி செய்வதைத் தடைசெய்யவேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் யே. சந்திரன் குறிப்பிட்டுள்ளார். (ந·5)

## சி. பி. ஐ. நீதிமன்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(புதுடில்லி)

போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஹிந்துஜா சகோதரர்கள் சி. பி. ஐ. நீதிமன்றத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.

ஹிந்துஜா சகோதரர்கள் தங்கள் மீதான சி. பி. ஐ. விசாரணை முடிவுற்றதும் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு அனுமதி கோரியிருந்த போதும், சி. பி. ஐ. நீதிமன்றம் அதனை நிராகரித்து விட்டது.

இதனையடுத்தே இவர்கள் சி. பி. ஐ நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து புதுடில்லி உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்துள்ளனர். (செ)

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்
- குறள் -

# வலம்புரி

## ஒளி தரும் பணி!

யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில் இன்று கண் சத்திர சிகிச்சை நிலையம் சிவத்தமிழ் அன்னையால் திறந்து வைக்கப்படவுள்ளது. இச் சத்திரசிகிச்சை நிலையத்தைத் திறந்து வைப்பதன் மூலம் இதுவரை காலமும் கண் சத்திர சிகிச்சைக்குத் தனியான நிலையம் இல்லையென்ற குறைபாடு நீங்கிவிடும். இதுவரை காலமும் யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் ஒரே ஒரு சத்திர சிகிச்சை நிலையத்திலேயே கண் சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப் பட்டது. இதனால் கால நேரம் கிடைக்கும்போதே கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடிந்தது.

ஆனால் இன்றைய திறப்பு விழா இதற்கெல்லாம் முடிவு கட்டி கண் சத்திர சிகிச்சையை விரைவுபடுத்தப் போகிறது என்பது உண்மை.

இச் சிகிச்சை நிலையத்தின் உருவாக்கத்திற்கு எல்லாம் அடிப்படைக்கரு ஆலமாக இருந்தவர் நம் மண்ணிலிருந்து சமய - சமூகப் புரியும் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் என்பதை நாம் மறந்து விட முடியாது.

2000ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலண்டன் மாநகருக்குச் சென்று அவர் ஆற்றிய உரை தந்தபரிசே இச் சத்திர சிகிச்சை நிலையமாகும்.

இலண்டனில் அமைந்துள்ள ''சிவயோகம்'' அறக்கட்டளை நிதியம் உள்ளிட்ட அமைப்பு முதல் இலண்டன் வாழ் தமிழ்மக்கள் வரை யாழ். போதனா வைத்திய சாலைக்கு உதவுங்கள் என்ற அவரின் உரையின் உந்துதலால் உவந்துதந்த பன்னிரண்டு இலட்சம் ரூபாவே இன்று கண் சத்திர சிகிச்சை நிலையமாக பரிணமித்துள்ளது.

ஆறுதிருமுருகனின் இவ்வுரைக்கு உரமூட்டியவர் நம் மத்தியிலிருந்து கண்ணொளி பரப்பும் வைத்திய நிபுணர் குகதாசன், அவரின் பணியை இச்சத்திரசிகிச்சை நிலையம் மேலும் துரிதப்படுத்த உதவும் என்பதால் இதனை ஒளி தரும்பணி எனலாம்.

இப்பணி போன்று மேலும் பல பணிக்காகக் காத்திருக்கும் நம் வைத்தியசாலைக்கு சமய சமூக அமைப்புகள் தத்தம் பெயரால் வாரி வழங்குவது காலம் உணர்ந்து செய்யும் இறைபணியாகும்.

# யாழ். மக்களின் அன்பிற்கு அடிபணிந்து கிழக்கில் துணைவேந்தர் பதவியை ஏற்கவில்லை!

## பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேட்டி

● நீங்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து யாழ்ப்பாண வளாகத்துக்கு வந்ததற்கான காரணத்தைக் கூறுவீர்களா?

□ இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 1974 ஆம் ஆண்டு தொடங்கிய போது, என்னுடைய ஆசிரியராகிய கலாநிதி க. கைலாசபதி வளாகத்தின் முதல் தலைவராகப் பதவியேற்றார். தமிழ்த் துறையைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு என்னை வரும்படி கேட்டு என் இசைவினைப் பெற்றபின், பேராதனை வளாகத்திலிருந்து என்னை யாழ்ப்பாண வளாகத்துக்கு மாற்றுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்தார். இதைவிட புதிதாகத் தமிழ்ப் பிரதேசத்திலே அமைக்கப்பட்ட வளாகத்திலே இணைந்து பணிசெய்ய வேண்டுமென்று எனக்கு மனத்தில் ஓர் ஆசை இருந்தது. அந்த ஆசையினுடைய இலக்கு இவ்வளாகத்துக்கு வந்து சேர்ந்த கல்விமான்களுடன் நானும் இணைந்து இதனை சிறந்த கல்வி நிறுவனமாக ஆக்குவது என்பதே ஆகும். அந்த இலக்கு தவறாமல் ஓரளவு இன்று நான் செயற்படுகின்றேன் என்று நினைக்கிறேன்.


● யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொடக்க கால நிலைபற்றி ஏதாவது கூறமுடியுமா?

□ 25ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மெல்ல நடை போட்டு வந்துள்ளது. அதனுடன் என்னைப் போன்ற சிலரும் உடன் நடந்து வந்துள்ளனர். வந்த வழியை ஒரு தடவை திரும்பி நோக்கும் சந்தர்ப்பமாக இந்த வினா அமைகிறது.

யாழ்ப்பாண வளாகம் அமைப்பது பற்றிய பேச்சு எழுந்த பொழுது புதிய கட்டடங்கள் அமைத்து பின்னர் அதனைத் தொடங்குவதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கவில்லை. எனவே யாழ்ப்பாணத்தில் பல்லாண்டுகளாக நிலவி வந்த பரமேஸ்வராக் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவும் யாழ்ப்பாண வளாகத்துக்கு இடம் கொடுத்தன. வளாகத்தின் முதல் தலைவராக கலாநிதி க. கைலாசபதி அரசினால் நியமிக்கப்பட்டார். முதன் முதலாக மனிதப்பண்பியல், விஞ்ஞானம் ஆகிய இரண்டு பீடங்களே அமைக்கப்பட்டன. கலாநிதி கா. இந்திரபாலா மனிதப் பண்பியல்பீடத் தலைவராகவும் பேராசிரியர் பே. கனகசபாபதி விஞ்ஞான பீடத் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப் பிரிவு பல்கலைக் கழக வளாகத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளது. அப்பிரிவு மாணவர்களும், ஆசிரியர்களும் பல்கலைக் கழகத்தினுள் உள்வாங்கப்பட்டன. கலாநிதி. டயு.எல் ஜெயசிங்கன், கலாநிதி. ஜே. பி. செல்லையா, திருவாளர்கள். ஜே. சத்தியதாஸ், ரி. குமாரசாமி, எஸ். கந்தையா, ஈ. முத்துத்தம்பி, வி. சிவசாமி, எஸ். கே. சிற்றம்பலம், ஆ. சிவனேசச்செல்வன், திருமதி ஆர். செல்வராசன், திருமதி யோ. கணேசலிங்கம் ஆகியோர் ஆசிரியர்களாகவும் ஆர். எஸ். தம்பையா அவர்கள் நூலகப்பொறுப்பாளராகவும் உள்வாங்கப்பட்டனர். இவர்களுள் தற்போது பல்கலைக் கழகத்தினுள் இருப்பவர்கள் பேராசிரியர் வி. சிவசாமி, பேராசிரியர் எஸ். கே. சிற்றம்பலம் ஆகிய இருவரும் ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்தவர்களுள் திரு. ஆ. சிவனேசச் செல்வனின் பணி வியந்து கூறுதற்குரியது. அவர் மனி



தப்பண்பியல் பீடத் தலைவர் பேராசிரியர் இந்திரபாலாவுக்கும் நூலகப்பொறுப்பாளர் தம்பையா அவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவி செய்தனர். நூற்கொடைகள் ஒழுங்கு பண்ணி பல்கலைக்கழக நூலகத்தை வளர்க்கவும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு நிறுவனங்களையும், பிரமுகர்களையும் யாழ்ப்பாண வளாகத்தினுள் இணைக்கவும் சிவனேசச் செல்வன் செய்த பங்களிப்பையும் நான் நன்கு அறிவேன். பல்கலைக்கழக வளாகம் தொடங்கிச் சில மாதங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து மாற்றம் பெற்று நானும் இங்கு வந்து சேர்ந்தேன். இவர்களுடன் நானும் சேர்ந்து இப்பல்கலைககழகத் தொடக்க கால நடவடிக்கைகளிலேயே ஈடுபட முடிந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தொடக்க காலப் பேராசிரியர்கள் க. கைலாசபதி கா. இந்திரபாலா, சா. கைலாசநாதக்குருக்கள், பே. கனகசபாபதி, க. [illegible]ணரட்ணம், வி. தர்மரட்ணம், வி. கே. கணேசலிங்கம், சி. மகேஸ்வரன்சுசரிதகம்லத்ஆகியோராவர். இவர்களுடைய அறிவுஆற்றல் உணர்வுஆகியன தொடக்ககாலப் பல்கலைக்சழக வளர்ச்சிக்கு உதவின.

யாழ்ப்பாண வளாகத்துக்கு முதன் முதலாக பல்கலைக் கழக மானியக் குழுவினால் தெரிவு அடிப்படையில் அனுப்பப்பட்டவர்களுள் சிங்கள மாணவர்களும பலர் வந்தனர். இதன் காரணமாகத் தொடசககாலப் பல்கலைக் கழக நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பல பாரிய பொறுபபுக்கள் ஏற்பட்டன. இரு சமூகத்து மாணவர்களிடையே பிரச்சினைகள் ஏற்படா வண்ணமும், மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே புரிந்துணர்வை ஏற்படுத்திச் சிக்கல் எழா வண்ணமும் ஆசிரியர்கள் அன்று உழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

தமிழ்ச் சங்கம் பல்கலைக் கழக வளாகத்தினுள் திறந்த வெளி அரங்கிலே ஒரு தமிழ்விழா நடத்த ஏற்பாடு செய்தது. தமிழ் விழாவைச் சிங்கள மாணவாகள் குழப்பப்போகின்றார்களென ஒரு வதந்தி உலாவியது. அப்பொழுது நான் மாணவ ஆலோசகராகவும் கடமையாற்றினேன். தமிழ்ச் சங்கத் தலைவரும் செயலாளரும் குழம்பிய நிலையில் என்னிடம் வந்தார்கள். வதந்திகளை நம்ப வேண்டாம். விழாவை ஒழுங்கு செய்தபடி நடத்துங்கள என்று கூறினேன். அந்த விழவில் ஒரு வடமோடிக் கூத்துப்பாணியில் ஒரு நாடகம் நடைபெற்றது. அதில் சி. மௌனகுருவும் சிவனேசச்செல்வனும் நானும் வேடமிட்டுக் கூத்தாடிய நிகழ்ச்சி இன்றும் பசுமையாக நினைவிலுள்ளது.

மட்டக்களப்பில் புயல் அடித்துப் பெரும் துன்பம் விளைந்த நேரத்தில், யாழ்ப்பாணவளாக மாணவாகள உடை, உணவு, பணம் மருந்து எனச் சேகரித்தனர். இவற்றைச் சேகரித்த பின்னர் மாணவன சங்கத் தலைவர் வ.ஐ.ச. ஜெயபாலன அப்பொருட்களுடன் தானும் பல்கலைக்கழக மாணவர்களும சேர்ந்து ஒரு பேருந்திலே மட்டக்களபபுச் செலவதற்கு அனுமதி வேண்டி வளாகத் தலைவர் பணியகத்துக்கு வந்தான். அப்பொழுது பேராசிரியர் கைலாசபதியுடன் நானும் இருந்தேன். உடை, உணவு முதலியவற்றை ஏதாவது பொது நிறுவனம் ஊடாக அனுப்புவது நல்லது என்றும் மாணவர்கள மட்டக்களப்புச் செல்வது நல்லதல்ல என்றும நாங்களிருவருமஜெயபாலனிடம் கூறினோம். புத்திஜீவிகளாகிய தாங்கள் இப்படித்தான் பேசுவீர்கள இந்த வேளையிலே மட்டக்களப்பு மக்களுக்கு நேரடியாகச் சென்று உதவாமல் நாங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என்று சொல்லி வெட்கப்பட வைககாதீர்கள் என்று ஜெயபாலன் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான. உடனடியாக அனுமதி வழங்கி விட்டோம். பின்னர் ஜெயபாலன் தலைமையிலேசென்ற பேருந்து வண்டியே முதன் முதலாக நிவாரணப்பொருட்களுடன் மட்டக்களப்புக்குள் நுழைந்ததென்று செய்திகேட்டுப் பெருமையடைந்தோம்.

மனிதப் பண்பியல் பீடத்தில் தமிழ், சிங்களம், வரலாறு, இந்து நாகரிகம் ஆகிய துறைகளுக்கு மட்டுமே பேராசியர்களிருந்தனர். விஞ்ஞான பீடத்திலோ பீடத் தலைவர் பே. கனகசபாபதி, கணிதவியல் பேராசிரியராகவே பேராதனை வளாகத்திலிருந்து இங்கு வந்தார். பின்னர் விலங்கியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றிற்கும் பேராசிரியர்கள நியமிக்கப்பட்டனர்.

● உங்களுடைய ஆசிரியர்களிடம கொண்ட தொடர்பினைஅடிப்படையாக வைத்து இன்றைய நிலைபற்றிக் கூற முடியுமா?

□ என்னுடைய ஆசிரியர்களிடம் நான் முதல் கற்றது அறிவினால் வந்த பணிவு என்னும் பண்பாகும். பேராசிரியர் கணபதிப்பிள்ளையைக் குருவாக மதித்து பணிவுடன் பழகிய பேராசிரியர் வித்தியானந்தன், கைலாச

→ 8ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினை நினைத்துப் பார்க்கும்போது யாழ்ப்பாண வளாகத்தில் முதலாவது தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி அவர்களுடன் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர், வி. சிவசாமி, பேராசிரியர் எஸ். கே. சிற்றம்பலம் ஆகியோர் நிழலாடுகிறார்கள். இவர்களில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணிவிழா நாயகனாகியுள்ளார்

சென்னை, பாரிஸ், யாழ்ப்பாணம், மதுரை, தஞ்சை, ஆகிய இடங்களில் இடம்பெற்ற உலகத் தமிழாராட்சி மகாநாடுகள், யப்பானில் இடம்பெற்ற மகாநாடுகள், கருத்தரங்குகள், 1987ல் கிழக்கு ஜேர்மனி பேர்லின் தலைநகரில நடைபெற்ற 'உலகமொழியியல் மாகாநாடு' 1996ல் மொறியஷில் நடைபெற்ற 'உலகதமிழ் ஆகிய மகாநாடு' 1999ல் மலேஷியாவில் நடைபெற்ற அகில உலக இராமாயண மகாபாரத மகாநாடு, 2000ஆம் ஆண்டில் இந்தோனேஷியாவில் நடைபெற்ற 2 வது அகில உலக இராமாயண மகாபாரத மகாநாடுகளில் கலந்துகொண்ட தமிழ்வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர்பட்ட ஆய்வு பீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸின் மணிவிழாவை ஒட்டி 'வலம்புரிக்கு வழங்கிய சிறப்புப்பேட்டி இங்கு பிரசுரமாக உள்ளது.

பேட்டிகண்டவர்--

**முத்துஇரத்தினதேவன்**

# நாட்டைகாப்பாற்ற முடியாத அரசு

# உடனடியாக பதவிவிலக வேண்டும்

## பாதயாத்திரையில் ரணில் உரை

(கண்டி)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டுபோகிறது. டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்கிறது இந்நிலையில் அரசு செய்வதறியாது திணறுகிறது.

ஐக்கியதேசியக்கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாதயாத்திரையைநேற்றுக்காலை 9-30 மணிக்கு கண்டியில் ஆரம்பித்துவைத்துப்பேசிய ஐக்கிய தேசியக்கட்சி தலைவரும் எதிர்க்கட்சிதலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு அரசு மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

மக்களுடைய வருமானத்தை அதிகரிக்கச்செய்வதற்கு அரசு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவேண்டுமானால் இதனைச் செய்வதற்கு அரசு தவறிவிட்டது. இதனால் அரசுஉடனடியாக பதவிவிலக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இப் பாதயாத்திரை மாலை5-30 மணிக்கு மாவனெல்லையை வந்தடைந்து. மீண்டும்இன்று காலை ஆரம்பமாகும் இப் பாதயாத்திரை மாவனெல்லையிலிருந்து ஆரம்பமாகி 9ம் திகதி கொழும்பை வந்தடையும். [வ

## எஸ்-எஸ்-ஈ-எ-எல் பதவி நியமனம்

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்விநிர்வாக சேவையில் உள்ள332வெற்றிடங்கள்இவ்வாண்டுநிரப்பப்படவுள்ளது.

கல்விதிணைக்கள சேவையில் மொத்தமாக உள்ள 448 இடங்களில் 126 பேர் மட்டும் தற்போது நியமனம்பெறவுள்ளனர். (வ)

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

[கி-1453]

53 வது சுதந்திரதினம்

## யாழ்ப்பாணத்திலும் அமைதியான நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

53வதுசுதந்திரதினக் கொண்டாட்டங்கள் நேற்று யாழ்குடாநாட்டில் அமைதியானமுறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் உள்ள வர்தக நிலையங்கள் நேற்றுவிடுமுறை தினமாகஇருந்ததால் திறக்கப்படவில்லையாயினும், தேசியக் கொடிகள் ஆங்காங்கே பறக்க விடப்பட்டிருந்தன.

யாழ்மாநகர சபைக்கட்டடத்திலும் தேசியக்கொடி பறக்கவிடப்பட்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது.

கடந்தகாலங்களைவிட இம்முறை யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இன்றி நடைபெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். (வ)

## வடக்கு கிழக்கில்

## உதவி வைத்தியர்கள் இன்று வேலை நிறுத்தம்

(கொழும்பு)

வடக்குகிழக்கிலுள்ள அரச வைத்திய சாலைகளில்கடமையாற்றும் உதவிமற்றும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் இன்று முதல்வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வடக்கு-கிழக்கு வைத்திய சாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு வழங்கப்படும் விசேட இடர்காலக் கொடுப்பனவு தமக்கும் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தே இவ்வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறவிருப்பதாக அகில இலங்கை உதவி மற்றும் பதிவு வைத்திய அதிகாரிகள் சங்கத்தலைவர் டாக்டர் கே. எம். சக்கீர் தெரிவித்துள்ளார். (ந-4

## திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்போதனா வைத்திய சாலையில் புதிதாகஅமைக்கப்பட்டுள்ள கண்சத்திரசிகிச்சை நிலையக் கட்டத்திறப்புவிழா இன்று திங்கட் கிழமை வைத்தியசாலைப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இக்கட்டடத்தினை சிவக்தமிழ் செல்வி கலாநி திதங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திறந்துவைப்பார். (ந-4)

## நீரில் மூழ்கி மாணவன்பலி

இரணைமடுக் குளத்தில் குளிக்கசென்ற மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமடைந்துள்ளான். திருவையாறு மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி நதிபன்(வயது-15)என்ற மாணவனே இவ்வாறு மரணமடைந்தவராவர். இச்சம்பவம்நேற்று நண்பகல் இடம் பெற்றது. (ந-4)

## தமிழர்களுக்கு இன்னமும் சுதந்திரம்கிடைக்கவில்லை

### தமிழ்க்கட்சி தலைவர்கள் ஆதங்கம்

(கொழும்பு

இலங்கையின் 53வதுசுதந்திரதினம் அரசினால் கொண்டாடப்படும் இவ்வேளையில் தமிழ்மக்கள்இச் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதில் அர்த்தம் இல்லை.காரணம் தமிழ்மக்களுக்குஇன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை.

இவ்வாறு தமிழ்க்கட்சித் தலைவர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். மலையகமக்கள் முன்னணித்தலைவர் சோ. சந்திரசேகரன் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சிசெயலர் குமரகுருபரன் ஐ தே கட்சியைச்சேர்ந்த மகேஸ்வரன் எம். பி உட்பட பல தமிழ்த்தலைவர்கள் இவ்வாறு கருத்துவெளியிட்டுள்ளனர். [வ]

பிரச்சினைக்கான..

வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தத்திற்கு முடிவுகட்டும்வகையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஓரளவு சாதகமான பதில் விடுதலைப் புலிகள் தரப்பிடமிருந்து கிடைத்துள்ளது.

சமாதானமே அரசாங்கத்தின் கொள்கையாகும் பேச்சுவார்த்தைக்கான சரியான சந்தர்ப்பத்தை தக்கபடி பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

எந்த ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டாலும் சமாதானம் என்ற இலக்கை ஒட்டி ஆராயப்பட வேண்டும்.

### நாட்டைப்பிரிக்க அனுமதியேன் பேச்சுக்கு கதவுதிறந்துள்ளது

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்துவதற்கான கதவை அரசாங்கம் இன்னமும் மூடிவிடவில்லை.

ஆனால் தமிழ் ஈழத்தை உருவாக்குவது பற்றியோ நாட்டை பிரிப்பது பற்றியோ அரசாங்கம் ஒரு போதும் ஆராயாது.

சகல மக்களும் ஐக்கியப்பட்டு,சமாதான மாகவாழும் வகையிலேயே பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும்.

ஆனால் அர்த்தமற்ற யுத்த நிறுத்தங்களை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை.

பேச்சுவார்த்தைகள்ஆரம்பமாகி அது திருப்தி கரமாக நடக்கும்போது உண்மையான யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும் சாத்தியம் பற்றி ஆராயமுடியும்.

முக்கியமான பிரச்சினைகள் பற்றிய ஒரு பலமான அரசியல் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும்.

தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடச் செய்வது சமாதானத்தை நேசிக்கும் அனைவரதும் கடமையுமாகும்.

தமிழ் மக்கள் தொடர்பாகவும் ஏனையசிறு பான்மை இனங்கள் தொடர்பாகவும் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையை சர்வதேச சமூகம் பாராட்டியுள்ளது.

சமாதானத்தை அடிநாதமாகக் கொண்டு புதிய நகல் சட்ட மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

### இணைந்து செயற்பட எதிர்க்கட்சிக்கு அழைப்பு

புதிய அரசியல் யாப்பை உருவாக்க வேண்டும் என்ற அபிலாசைகளை விடவில்லை. இவ் விடயத்தில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க் கட்சியினருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

கடந்த கால புத்திசாதுரிய மற்ற கொள்கைகள் காரணமாக பெரும் அழிவு ஏற்பட்டது.

தற்பொழுது நம்பிக்கையின் ஒளி தென்படுகிறது. இவ் ஒளியானது உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க நமக்கு உதவட்டும்.

உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவுகட்டவும், பொருளாதாரத்தை மீண்டும் கட்டி எழுப்பும் பணியிலும் நாம் ஈடுபட்டுள்ளோம். யுத்தம், மோதலும் இல்லாது அனைவருக்கும் சமத்துவமும், சுதந்திரமும் கிடைக்கின்ற அமைதிபூர்வமான சமூகத்தில் தான் தேசிய சுதந்திரத்தின் பரிபூரணபலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### நம்பிக்கை ஒளி தெரிகிறது

தற்போதைய சூழ்நிலை அதற்கான நம்பிக்கையின் ஒளி தென்படுகின்றது.

இவ் ஒளி சுதந்திரத்தின் முழுமையான பலன்களை அடைவதற்கு எமக்கு நல்ல சந்தர்ப்பத்தை தந்துள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பது, மனித உரிமைகளை வலுப்படுத்துவது அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது முதலான ஏற்பாடுகள் அரசியல் அமைப்பில்காணப்படுகின்றன.

அரசியல் அமைப்புத்திட்டம் தொடர்பாக எதிர்க் கட்சியினர் அரசாங்கத்துடன் இணையுமாறும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். (வ-சு)

**ஸ்ரீ செல்வா**

(யாழ்ப்பாணம்)

வினித், சாலினி, மம்முட்டி, குஷ்பு நடித்த

**வாழ்த்துகிறேன்**

10-30 2-30

(ப. நே)

CD பிரதி

புதிய வெளியீடு

(கி 1943)

குண்டுதுளைக்காத அங்கி விவகாரம்

## பிரித்தானியக் கம்பனியின் மீது இலங்கை வழக்குத்தாக்கல் செய்யும்

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு குண்டு துளைக்காத அங்கிகளைக் கொள்வனவு செய்வதற்காக, பிரித்தானியாவிலுள்ள கம்பனி ஒன்றுடன் அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய செலுத்திய 12.8 மில்லியன் ரூபாவையும் திருப்பித் தருமாறு கோரி அரசாங்கம் குறித்த கம்பனிக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யவுள்ளது.

குண்டு துளைக்காத அங்கிகளைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கம், பிரித்தானியக் கம்பனியான ''லைற் வெயிற் பொடி ஆடர் கம்பனி லிமிட்டெட்'' என்ற நிறுவனமே ஒப்பந்தம் செதிய்ருந்தது.

உடன்படிக்கைக்கு அமைவாக கம்பனிக்கு இலங்கை அரசாங்கம் அங்கிக் கொள்வனவுககாக 12.8 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது ஆனால் இதற்கமைய கம்பனியால் அனுப்பட்ட அங்கிகள் தரம் குறைந்தவைபாகவும் மாதிரிக்கு மாறானதாகவும் இருந்தது இதனாலேயே வழங்கிய பணத்தை மீளத் தருமாறு கோரி அரசு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மேலும்---

இத்தேவேளை கடந்த வருடம் 800 தொண்டராசிரியர்களும் 350 பட்டதாரி ஆசிரியாகளும் க.பொ.த உயர் தரத்தில் சித்தியெய்தியவர்களில் 1250 ஆசியர் நியமனம் பெற்றமை குறிப்பிடத்தக்க கதாகும். (வ)

## சுதந்திர தினத்தன்று 1300கைதிகள் விடுதலை

(கொழும்பு)

இலங்கையின் 53 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிக்காகுமாரதுங்காவின் விசேட பணிப்பின் பேரில் நாட்டின் பல பாகங்களில் உள்ள சிறைகளிலிருந்தும்சுமார் ஆயிரத்து 300 கைதிகள் நேற்று விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களில் 300 பேர் கொழும்பு வெலிக்கடை சிறையிலிருந்தும், மிகுதி ஆயிரம்பேர்நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள சிறைகளிலிருந்தும் விடுதலைசெய்யப் பட்டுள்ளனர்.

விடுதலையானவர்கள் அனைவரும் சிறுகுற்றங்களுக்காகசிறைத் தண்டனை அனுபவித்தவர்களென்று சிறை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ந-4)

நாட்டில்---

யாழ் அரசசெயலகத்தில் நேற்றுஇடம்பெற்ற சுதந்திர தினநிகழ்வில் உரையாற்றிய அரசஅதிபர் கே. சண்முகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்அரச செயலக உயரதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சமூகமளித்திருந்தனர்.

நேற்றுக்காலை 8 30மணிக்குஆரம்பமான இந்நிகழ்வில் யாழ் வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலை மாணவிகளால் தேசியகீதம் இசைக்கப்பட்டது. செயலக வளவில் சுதந்திரதினத்தையொட்டி மரம்நாட்டும்வைபவமும் இடம்பெற்றது. (இ-77)

## O/L முடிவுகள் அடுத்த மாதம்

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில்நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் அடுத்தமாத முற்பகுதியில் வெளிவிடப் படுமென்று பரீட்சை ஆணையாளர்நாயகம்அமரக்கோன்தெரிவித்துள்ளார்.

பரீட்சைவினாத்தாள்களின் திருத்த வேலைகள் மும்மரமாக நடைபெறுவதனால் பரீட்சை முடிவுகளை விரைவில் வெளியிட முடியுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இதேவேளை பரீட்சை ஆனையாளர். நாயகம் அமரக்கோன் ஏப்ரல் மாதத்துடன் ஓய்வு பெறுகின்றார்என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ)

நயினா தீவில்---

மண்டபத்தை யாழ்பல்கலைக்கழத் துணைவேந்தர் பேராசிரியர்பாலசுந்தரம் பிள்ளையும். ஸ்ரீ அன்னபூரணி யாத்திரிகர் மண்டபத்தை உடுவில் பிரதேச செயலர் ஆ:மகாலிங்கமும் திறந்து வைப்பர். [ந-ப16]

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.